புதிய அவையம்

PUTHIYA AVAIYAM
(PEER – REVIEWED JOURNAL)
ISSN :2456-821X
Vol. 08, Issue 02, January 2025

==========================================================

# அகநானூற்றில் நிகழ்த்துக்கலைக் கூத்து

==========================================================

முனைவர். கமலா.கோ.
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தமிழ்த்துறை,
தூயநெஞ்சக்கல்லூரி
திருப்பத்தூர்.

================================================================================

## முன்னுரை:

ஒரு மனிதன் தன்னுடைய கற்பனைக்கு எட்டா பொருளை சிந்தனைக்கும் மன உணர்ச்சிக்கும் ஏற்றவாறு வெளிப்படுத்தும் சிறந்த திறனைக் கலையெனப்படுகிறது. நுட்பமான தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியது. மனித நடத்தையினாலும் கலைநுட்பத் திறமையுடன் கூடிய பொருட்கள் அல்லது நிகழ்வுகளைப் புனைந்து காட்சிப்படுத்துதல் அல்லது அரங்கேற்றல் அல்லது கைவினை கலைநயம் படைத்தல் ஆகும். இதன் மூலம் பண்பாடு வரலாறு அழகியல் போன்றவை பாராட்டுதலுக்காகவும் இரசிக்கும்படியாகவும் காட்சிப்படுத்தப்படுகிறது.

பிற உயிரினங்களில் இருந்து மனிதனைத் தனித்துக் காட்டுவது கலை நுட்பமாகும். உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை ஒருங்கிணைத்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலை ஆகும். காண்கிற காட்சியிலும் கேட்கிற இந்நோசையிலும் நாட்டத்துடன் திரட்டப்படும் அழகு உணர்வை ஒருவன் எவ்வாறேனும் புறக்கருவி வாயிலாக அவன் கல்லைக் கருவியாகக் கொண்டு சிற்பத்தையும் வண்ணத்தைக் கருவியாகக் கொண்டு ஓவியத்தையும், ஓசையைக்

கருவியாகக் கொண்டு இசையையும், நடிப்பைக் கருவியாகக் கொண்டு கூத்தையும் நிகழ்த்துவதோடு சிறப்பான ஒவ்வொன்றையும் கருவியாகக் கொண்டு ஒவ்வொரு கலையையும் வினைப் பாங்குடன் உருவாக்கலானான். இவ்வாறாக உருவாக்கப்பட்ட கலை பற்றி சிந்திக்கையில் கலை என்பது செயல் திறனைச் சிறப்பாக உணர்த்துகிறது என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

**கலை – விளக்கம்:**

இயற்கையாகவும் மக்களால் செயற்கையாக உருவாக்கப்பட்ட பொருளையும் கலையாக அல்லது கலைப் படைப்பாகக் கருதலாம். கலை என்பதற்கு அந்தக் காலங்களில் மக்களின் வாழ்வியல் பயன்பாட்டிற்கு ஏற்பவும், நாகரீக வளர்ச்சிக்கு ஏற்பவும் அவரவர் எந்தக் கோணத்தில் நோக்குகின்றனரோ அந்தக் கோணத்தைப் பொறுத்தே அந்தவிளக்கம் தரப்படுகிறது. எனவே, கலையை இன்னது தான் என்று இலக்கண வரையறை கூறி விளக்க இயலாது.

கலை என்பது மெய்ப்பொருளின் முற்றத்திலிருந்து துய்ப்போரை கருவறைக்கு இட்டுச் சென்று உலகியலைக் கடந்து நிற்கும் காட்சியினைப் புலப்படுத்தி நிற்கும் என்று கோல்ட் செல்லிங் குறிப்பிடுகின்றார். கலை மனிதனுக்குக் கட்டுப்பட்டதன்று. கலை ஒரு கருவி. மனிதனுக்கு மகிழ்வு தரும் கருவி. நேர்மையான மகிழ்வு அம் மகிழ்வு மனிதனின் உள்ளத்தைப் பொறுத்தது என்று விமி ஞான பிரகாசம் கூறுகிறார். அறிஞர்களின் கருத்துகளைப் பார்க்கும் பொழுது கலை உருவமற்றது என்று தெளிவாக வெளிப்படுகிறது. மனிதனைப் பொறுத்து கலை அமைகின்றது. கலையின் தாக்கம் மனத்திற்கு மனம் வேறுபடலாம். அவ்வாறாகக் கலைகளை நாம் நிகழ்த்துக்கலை, நிகழ்த்தாக் கலை என இரண்டு பிரிவுகளாக நாம் பிரிக்கலாம். அதனுள் கூத்து, பரிசிலர், பாடினி, விரலியர் தொழிலுக்கேற்ற இசைக்கருவி, பிற இசைக்கருவிகள், பெண் அணியக்கூடிய அணிகலன்கள், தழையாடை அணிதல், தொய்யில் வரைதல், ஓவியம் தீட்டுதல் ஆகியவற்றில் சங்க காலம் சமூகத்தில் பெண்களின் அதிகமாகவும் சிறப்பாகவும் இருந்தது என குறிப்பிடப்படுகின்றது.

கூத்து:

சங்க கால மக்கள் வாழ்வில் வழிபாடு என்பது இன்றியமையாத இடத்தினைப் பெற்று இருந்தது. இறைவனை வழிபடுகையில் மக்கள் ஆடியும் பாடியும் வழிபட்டினர். இறைவனையும் கூத்தாடும் நிலையிலேயே கண்டு மகிழ்ந்தனர். இதனைப் “பல்லுருவம் பெயர்த்து நீ கொடுகட்டி யாடுங்கால்” என்னும் கலித்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல் வெளிப்படுத்துகிறது.

தமிழ் முத்தமிழ் என்று வழங்கப்படும். முத்தமிழின் கூறுகள் இயல் இசை நாடகம் என்பன நாடகத்தில் கூத்துக் கலையை அடக்கலாம். இதயத்திற்கு இன்பம் பயப்பது இயல் என்றும் ஒலி நயத்துடன் பாடப்பெறும் பொழுது இசையுடன் இயைந்தது இசை என்றும், மெய்ப்பாடுகளினால் வெளிப்படுத்தப் பெறுவது கூத்து என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது. கூத்துகளின் வகை பற்றி தொல்காப்பியர் பதினொன்று என்று பாகுபடுத்திக் கூறினார். இதனை இளம்புரநர் உரையில்,

"கடைமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா வல்லியம் கும்பம் - சுடர் வாழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையரண் பாண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து"

என்று கூறுகிறார். சிலப்பதிகாரத்தில் "கடையம்" முதலாகக் கொண்டு "கொடுகொட்டி" ஈறாகப் பதினொரு கூத்துகளைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது. அடியார்க்கு நல்லார் கூத்து பற்றிய 11 வகைகளையும் சிறப்பான முறையில் வெளிப்படுத்தியுள்ளமை சிறப்பிற்குரியதாகும். இலக்கியத்தில் கூத்துக்களல நிலை பெற்றுவிட்டது. இன்றைய காலகட்டத்தில் கூத்துக்கலை நிகழ்ச்சி பெரும்பாலும் பொழுதுபோக்கு அம்சமாகவே விழாக் காலங்களில் கிராமப்புறங்களில் நிகழ்த்தப்படுகிறது.

"சூழ்கழன் கூத்தின் இலக்கண மறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினொ ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்தாங்கு"

என விளக்கி அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார். பழங்காலத்தில் பாட்டும் கூத்தும் நாட்டு மக்களின் வாழ்க்கையோடு கலந்து உறவாடி களிப்பூட்டின.

சங்ககாலம் தமிழ்க்கலைகளின் ஒளிமயமாக இருந்தது. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் இசைக்கும் நாடகத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. நாடகம் என்ற சொல்லும், கூத்து என்ற சொல்லும் தமிழ் இலக்கியங்களில் பலவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன.

"நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த
வீசு வீங்கின்னியம் கடுப்ப"

என்ற அடிகள் மக்களிடையே கூத்துக்கலை நீங்காது இடம்பெற்றிருக்கின்றது. நாடகமும் கூத்தும் ஒரே அர்த்தம் உள்ளவை என்று திவாகர நிகண்டு உணர்த்துகின்றது.

"நடமே நாடகம் கல்லுள் நட்டம்
பரதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆளுதல் தூங்கல் வாணி குரவை
நிலையம் நிறுத்தம் கூத்தெனப்படுமே"

எனக் கூறுகின்றது. சங்க காலத்தில் கூத்துகள் பலவகையாகக் கொள்ளப்பட்டாலும் சில கூத்துகளைத்தான் மக்கள் விரும்பினர். அவை மட்டுமே மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றுச் சிறந்து விளங்கின.

அகநானூற்றில் இடம்பெறும் கூத்துகள்:

அகநானூற்றில் பெயர் சுடப்படாத நிலையிலேயே தான் கூத்துகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. திருமண நாள் போன்ற நன்னிகழ்வுகளைக் கொண்டாடும் வகையில் கூத்துகள் நிகழ்த்தப்பட்டன. மணநாள் காலத்தே பூக்கள் மலர்ந்து உதிர்ந்த முற்றத்தில் குறவர்கள் ஆடலில் வல்ல திறமை மிக்க மகளிரோடு குறவை பாடி ஆடி மணமகிழ்ந்தனர் என்பதை,

"குன்ற வேலிச் சிறுகுடியாங்கன்
மன்ற வேங்கை மணநாட் புத்த
மணியேர் அரும்பின் பொன்வீ அதாய்
வியலறை வரிக்கு முன்றில் குறவர்
மனைமுது மகளிரொடு குறவை தூங்கும்
ஆர்கலி விளவுக்களங் கடுப்ப நாளும்" (அகம்–232)

என்ற அடிகளின் வாயிலாக நிகழ்த்தப்பட்டுள்ளது என்ற செய்தி கிடைக்கப் பெறுகிறது. மகிழ்வினை வெளிப்படுத்தக்கூடிய செய்திகள் அனைத்தும் கூத்து நிகழ்விலேயே களிப்படைந்துள்ளனர்.

சங்ககாலத் தமிழர் தம் வாழ்வில் வழிபாடு மிகுந்திருந்தது. வழிபாட்டில் கூத்தும் பெரும் பங்கு வகித்திருந்தது. கூத்துகளில் குறவைக் கூத்து என்னும் குழுக்கூத்து வழிபாட்டிற்கும் பயன்பட்டது என்று பல இலக்கியங்கள் கூறினாலும் அகநானூற்றில் குறவைக்கூத்து பற்றிய செய்திகள் சிறப்பாக வெளிப்படையாக அமைந்துள்ளது. இதனையே கலித்தொகையில்,

"குறவை கூறிஇ யாம் மரபுளி பாடி
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்"

கூத்து நிகழ்த்தப்பட்டுள்ளது என்ற செய்தி நம்மால் உணர முடிகிறது. தைத்திருநாளில் விழாவுக்குரிய பாவையை நடுவில் வைத்து அதனைச் சுற்றி மகளிர் சேர்ந்து கூத்து நிகழ்த்தி மனம் மகிழ்ந்தனர் என்பதனை அகநானூற்றுப் பாடல்,

"நலங்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வரப்
பாடுர் பெழுதரும் பகுவாய் பண்டிலத்து
வயிரிடப் பட்ட தெள்விளி இயம்ப
வண்டர் பாவை யுண்டுறைத் தரீஇத்
திருநுதன் மகளிர் குரவை அயரும்" (அகம் – 269)

என்று அடிகளின் வாயிலாக கூத்து நிகழ்த்தப்பட்டது என்ற செய்தி கிட்டுகிறது ஒவ்வொரு விளையாட்டுக்கும் கூத்து முறையிலான பாடல்களைப் பாடியும் ஆடல்கள் ஆடியும் மனமகிழ்ந்தனர். வண்டற்பாவையினைச் செய்து அதற்கு ஏற்றார் போல் தம்மையும் ஒப்புமைப்படுத்திக் கொண்டே குரவையாடினர் என்ற செய்தியை இதன் வழி புலப்படுகிறது.

கூத்து விருப்பப்பட்டதால் கூத்தர் பெருகினர். கூத்தர் பெருகியதால் அவர்களில் பல பிரிவுகளும் தோன்றலாயின. கூத்துகள் தொழில்முறையிலும் நடத்தப்பட்டன. கூத்துக்கலையில் பெண்களும் சிறந்து விளங்கினர். ஆடவர்களுக்கு இணையாக தம்மையும் ஒப்புமைப் படுத்திக் கொண்டு கூத்தினை நிகழ்த்தினர். இதன் மூலம் பெண்கள் கூத்தினை மேற்கொண்டது தெரிகின்றது.

சங்க கால வீதிகளில் கூத்தினை நிகழ்த்தியுள்ளனர் என்பது குறித்து அகநானூற்றுப் பாடல் ஒன்று வெளிகாட்டி உள்ளது.

"கலைமான் நலையின் முதன்முதற் கவர்த்த

கோயங் கவட்ட குறுங்கா லுழிஞ்சிற்
நாறுசினை விளைந்த நெற்றம் ஆடுமகள்
அரிக்கோள் பாறையின் ஐயனெ ஒலிக்கும்" (அகம்-151)

என்ற பாடல் அடியின் மூலமாக நெற்கதிர்களின் ஓசையினையும் ஆடும் கருவியின் ஓசையினையும் ஒப்புமைப்படுத்திக் காட்டியுள்ளது. சதுப் என்று ஆடும் பொழுது ஒலிக்கு இசைக்கு ஏற்றார் போல் உள்ளது. கூத்தானது மன்னனைப் புகழ்ந்து பாடுவதாகவும், செல்வச் செழிப்பு, இயற்கை வளம் மனமகிழ்ச்சிக்கு ஏற்றார் போன்றும் வடிவம் பெற்றது. எந்தச் சூழ்நிலையிலும் கூத்து நிகழ்த்தினாலும் அது மன மகிழ்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

வெறியாட்டு, முருகப்பெருமானை நினைத்து ஆடப்பெறும் கூத்து வகைகளின் ஒன்றாகும். இவ்வகைக் கூத்தினை ஆடுவோர் இறைவன் தன் மீது வந்து வெளிப்படுவான் என்று எண்ணி ஆடுவர். வெறியாடுபவர் கையில் வேலை வைத்துக்கொண்டு கூத்தாடுவர். அவ்வாறு ஆடுபவரை வேலன் என்று குறிப்பிடுவர் என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகின்றது. விளையாட்டின் மரபையும் குறைவைக்கூத்து இயல்பையும் மதுரைக்காஞ்சியில்

"அருங்கிடி வேலன் முருகொடு வளைஇ நின்ற குரவை"

என்ற அடி சொல்ல வரும் கருத்து குல மரபாகவும், கூத்தின் படிவமாகவும், நம்பிக்கையின் உண்மையாகவும், பழக்க வழக்கங்களில் ஒன்றாகவும் வெறியாட்டு நிகழ்த்தப்பட்டது என்ற செய்தி நமக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது.

அரசனுடைய புகழையும் பெருமையையும் மக்களுக்கு அறிவிக்கும் வகையில் இக்கூத்து நிகழ்த்தப்பட்டது. வெறியாட்டுக் களத்தில் கட்டுவிச்சியானவள் கூத்தினை நிகழ்த்தியமைக்கு,

"திருந்திலை நெடுவேர் றென்னவன் பொதிய
லருஞ்சிமை யிழிதரு மார்த்துவர லருவியிற்
றதும்புசீ ரின்னியங் கறங்கள் கைதொழு
துருகெழு சிறப்பின் முருகுமனைத் தரீஇத்
கடம்புங் களிறும் பாடி" (அகம்-138)

என்ற அடிகள் மூலம் நமக்கு தெளிவாக புலப்படுகின்றது. தலைவனாகிய பாண்டிய மன்னனைப் புகழ்ந்து பாடி வெறியாட்டு நிகழ்த்தினர் என்ற செய்தி நம்மால் உணர்வதோடு மட்டுமில்லாமல் இசைக் கருவிகளையும் இசைத்து பாடல்களையும் பாடி மகிழ்வித்து இருக்கின்றனர் என்ற செய்தி கலைநயத்தை மீண்டும் வளர்ச்சி அடையச்செய்திருக்கிறது.

கூத்துக்கலையில் பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் கூத்தினை நிகழ்த்தியுள்ளனர் அரசர்கள் போர்க்களத்தில் வெற்றி பெற்றவுடன் வீரர்கள் அரசனைப் புகழ்ந்து பாடி மகிழ்ச்சி ஊட்டும் வண்ணம் கூத்து நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. மன்னனின் வெற்றிச் சிறப்பு காரணமாக நிகழ்த்தப்படுவதால் இக்கூத்தினை 'வென்றிக்கூத்து' என்று அழைத்துள்ளனர். இக்கூத்தின் படைவீரர்கள் களிப்பு மிகுதியால் ஆரவாரம் செய்வதைப் போலவே, தலைவனும் தலைவியும் காதல் கொண்ட செய்தியினை மக்கள் அலர் பேசுகின்றனர். மக்களின் அறியாமையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. ஒழுக்கத்தின் நியதியை வெளிப்படுத்தும் விதமாகப் பாடலொன்று,

"ஊட்டரு மரபி னஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞலி
புள்ளிற் கேமமாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை யதியற் கொன்றுவந்
தொள்வா ளமலை யாடிய" (அகம்-142)

அரசன் போரில் பெற்ற வெற்றிச் சிறப்பை மகிழ்ந்து கொண்டாடும் வகையில் கூத்துகள் நிகழ்த்தப்பட்டன. சங்ககாலத்தில் போர்க்களத்தில் பகைமன்னனைத் தோற்கடித்த பின்பு அவனுடைய நாட்டினைக் கைப்பற்றிய மகிழ்ச்சியின் காரணமாகக் கூத்துகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

மணவிழாக்களில் இசைக்கருவிகள் பல முழங்கப்பட்டன. தெருவில் ஆடவர்கள் மகளிரோடு சேர்ந்து குரவைக் கூத்தாடினர். அப்பொழுது தொண்டகப் பறையும் கொட்டப்பட்டது என்ற செய்தியின் வாயிலாக கலைதிறனுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதும், கலை மரபிற்கு இலக்கணமாகவும் திகழ்ந்துள்ளமை பெருமிதம் அடையவைக்கின்றது.

முடிவுரை:

கூத்து நிகழ்வு அன்றைய மக்களிடையே மிகுந்த ஆர்வத்தோடும், ஆரவரத்தோடும் ஆதரிக்கப்பட்டு வந்தன. மன்னன் முதல் மக்கள் வரை கலை நிகழ்ச்சிக்கு முழுக் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் கூத்துக்கலை, அங்கீகாரத்திற்கு மட்டும் அரை வாழ்நாள்களைக் கடந்தும் கழிந்தும் செல்கின்றது. இருப்பினும் கிடைத்தபாடில்லை. ஒவ்வொரு கூத்துக்கலைஞனும் தங்களுடைய பண்பாட்டினை எப்படியாவது இளைய தலைமுறையினருக்குப் பதிய வைக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டுதான் தங்களின் கலைகளை நிகழ்த்துகின்றனர். இன்றைய பெற்றோர்களின் இளம்வயதில், திருவிழாக்காலங்களில் நிகழ்த்தப்படும் கூத்துகளைக் காண்பதற்காகக் கிராமம் விட்டுக் கிராமம் சென்று கண்டுகளித்து வந்துள்ளனர் என்பதை நினைவு கூரத்தக்கதாய் அமைகின்றது.

நாடகக்கலை, தெருக்கூத்து, இராஜா இராணி ஆட்டக்கலை, கரகாட்டம், ஒயிலாட்டம், முதலிய கூத்துகளைக் காண்பதற்காகத் தன் நண்பர்களோடு மாலைப் பொழுதே தயாராகிச் சென்றுவிடுவர். கலையினை முழுமையாகப் பார்க்கின்றனரோ இல்லையோ ஆனால் இரண்டு மூன்று மைல்கள் நடந்து சென்று கூத்தினை இரசித்துள்ளனர். அப்படிப்பட்ட மரபில் பிறந்து வளர்ந்த இன்றைய இளைய சமூகத்தினர் கலைகளுக்குச் செவி சாய்ப்பது என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. தொழில் நுட்பக் கருவிகளால் வளர்ச்சி பெற்றாலும் நம்முடைய பண்பாடு கலாச்சாரம் மரபிற்கான சாட்சிகளைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்பது நம் அனைவரின் குறிக்கோளாய்க் கருத்தில் கொள்ள வேண்டும். கலைகளை வளர்ப்போம் கலையோடு வாழ்வோம்…

*******

துணைநூற்பட்டியல்:


1. சாமிநாதய்யர்.உ.வே. புறநானூறு
2. சாமிநாதய்யர்.உ.வே. அகநானூறு
3. அடியார்க்கு நல்லார் உரை-சிலப்பதிகாரம்
4. முத்துசண்முகம் நீதிவாணன்.ஜெ. பாட்டும் கூத்தும்
5. தொல்காப்பியம் இளம்புரணர் பொருளதிகாரம்.

6. சாமிநாதய்யர்.உ.வே. கலித்தொகை
7. வெள்ளைவாரணன்.க சங்ககாலத் தமிழ் மக்கள்.
8. கண்ணன் கோ. பண்டைத்தமிழரின் ஒலி உணர்வும் இசை உணர்வும்.
9. கி. பார்த்திபராஜா தமிழ்க் கலை மணிகள்
10. சுப்பிரமண்யன்.ந. சங்ககால வாழ்வியல்
11. கி.பார்த்திபராஜா சங்கப் பலகை-இலக்கியக் கட்டுரைகள்.